**IN THE COURT OF ADHOC – (II)**

**CITY CIVIL COURT, CHENNAI –104**

**OS. NO: 4230/2020**

**Deposition of: DW1** **DATE: 14.10.2025**

**NAME: N.M.Naina Mohamed**

**AGE: 40 Years**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்:**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.9 என்ற தீர்ப்புரைக்கு எதிராக நான் தாக்கல் செய்ததாக சொல்லும் மேல்முறையீட்டை நிரூபிக்கும் வகையில் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்ததாக சொல்லும் மேல்முறையீட்டில் இந்த வழக்கின் வாதிக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு ஆஜராகி உள்ளாரா என்றால் சம்மன் சார்வு செய்யப்படவில்லை. வாதிக்கு சார்வு செய்யப்படாத சம்மனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.9 தீர்ப்புரைக்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்து நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு 1, 2 பிரதிவாதிகளால் வாதி பெயருக்கு கிரைய ஒப்பந்தம் செய்து கொடுக்கப்பட்டு அதன் பிறகு கிரையம் செய்து கொடுக்கப்பட்டதால் நான் வாங்கிய கிரையம் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.